2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், என்ன?

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் அவர்கள் தலைமையிலான விசாரணைக் குழுவின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் விசாரணைக் கமிஷன் சம்பந்தப்பட்டது. தற்போது எடுத்துக்கொள்ள முடியாது.

[இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் திருமதி எஸ். விஜயதரணி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.]

6. கவன ஈர்ப்பு

பரப்பலாறு அணையிலிருந்து நீர் வெளியேறும் கால்வாயில் சிமென்ட் லைனிங் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிப்பதற்கு விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

பரப்பலாறு அணை, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு கிராமத்தில் அமைந்துள்ளது.

இவ்வணையின்மூலம் 6 ஏரிகள் மற்றும் 8 அணைக்கட்டுகள் வழியாக மொத்தம் 2,323 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

இந்நீர்த்தேக்கத்தின் ஆரம்பக் கொள்ளளவு 197.95 மில்லியன் கன அடியாக இருந்தது. தற்சமயம், 22.01 மில்லியன் கன அடி என்ற அளவில் வண்டல் மண் படிந்து, இதன் தற்போதைய கொள்ளளவு 175.94 கன அடியாகக் குறைந்துள்ளது.

இதில், அணையிலிருந்து ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகளுக்குச் செல்லும் வாய்க்கால்கள் அனைத்தும் மண் வாய்க்கால்களாகவே அமைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், வருடம் ஒரு போகம், அதாவது டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை, 120 நாட்களுக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில் வருடந்தோறும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தினசரி குடிநீர் தேவைக்காக 5 கன அடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த நவம்பர் 2014 ஆம் ஆண்டு பெருமாள்குளம் வரத்து வாய்க்காலில், அதிக வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகள் வெள்ள நிவாரண நிதியின்கீழ் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைத்து சரி செய்யப்பட்டுள்ளன. தற்போது அனைத்து வரத்துக் கால்வாய்களும் நல்ல நிலையிலேயே உள்ளன.

இந்த வாய்க்கால்களில், ஒட்டன்சத்திரம் வட்டத்தில் உள்ள 7 வாய்க்கால்களின் நீளம் 15.80 கி.மீ. ஆகும். இவை 25 கன அடியில் இருந்து 120 கன அடி தண்ணீர் வழங்கும் நிலையில் உள்ளன. இதன்மூலம் 2,034 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அரவக்குறிச்சி வட்டத்தில் உள்ள 3 வாய்க்கால்களின் நீளம் 9.05 கி.மீ. ஆகும். இவை, 20 முதல் 70 கன அடி தண்ணீர் வழங்கும் நிலையில் உள்ளன. இதன்மூலம் 289 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இந்நிலையில், மேற்படி குளங்களுக்கான வரத்து வாய்க்கால்களுக்கு தற்சமயம் சிமென்ட் லைனிங் அமைக்கும் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

2015 செப்டம்பர் 14]

முற்பகல் 11-50

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையை வைத்துவிட்டார்கள். நீங்கள், அறிக்கையின்மீது கேள்வி கேளுங்கள்.*

திரு. இ. பெரியசாமி: *திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணை, 1974 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட அணையாகும். இதனுடைய நீராதாரத்தை ஏறத்தாழ 6 ஏரிகளும் மற்றும் 8 அணைக்கட்டுகளும், நங்காஞ்சியாறு அணையும் பெறுகின்றன. இதில் மிக முக்கியமாக, ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு 5 கன அடி தண்ணீர் இந்த பரப்பலாறு அணையிலிருந்துதான் வழங்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, மழைக் காலங்களில் இதற்குச் செல்கின்ற வாய்க்கால்கள் மண் வாய்க்கால்களாக இருக்கின்ற காரணத்தால், அதிகமான தண்ணீர் வருவதால், அவை சேதமடைகின்ற நிலையிலே ஏரிகள் நிரம்புவதில் நிறைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏரிகள் நிரம்புவதிலே தாமதம் ஏற்படுகிறது அல்லது ஏரிகள் நிரம்புவதில்லை. நங்காஞ்சியாறு அணை நிரம்புவதிலும் தடங்கல்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு ஒட்டன்சத்திரம் நகரத்திலே ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு 20,000-க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றார்கள். குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால், பரப்பலாறு அணை ஏறத்தாழ 40 ஆண்டுகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. இ. பெரியசாமி: *பரப்பலாறு அணை 40 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அணை என்ற காரணத்தால், மண் மேடு உருவாகியிருக்கின்றது. நங்காஞ்சியாறு அணைமூலம் 6,000 ஏக்கர் பாசனம் பெறும் வகையில் ஏற்கெனவே கட்டப்பட்ட சிமென்ட் வாய்க்கால்கள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரப்பலாறு அணையைத் தூர் வாருவதற்கும், இந்த அணைக்கு வருகின்ற வரத்து வாய்க்கால்களை*

சிமென்ட் வாய்க்கால்களாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு கிராமத்தில் அமைந்துள்ள பரப்பலாறு அணைக்கு பச்சை மலை, அரளிப்பாறை மற்றும் பாச்சலூர் மலைப் பகுதிகளிலிருந்து பரப்பலாறு, கோமாளியாறு மற்றும் மாஞ்சோலையாறு ஆகிய ஆறுகளின் வழியாகத் தண்ணீர் வருகிறது. கடந்த 26 வருடங்களில் சராசரியாக, ஆண்டுக்கு 665 மில்லியன் கன அடி என்ற அளவில் தண்ணீர் வரத்து உள்ளது. பரப்பலாறு அணையானது 81.08 மீட்டர் நீளம் கொண்ட கல் அணையாகும். அணையின் உயரம் 27.44 மீட்டர், அதாவது 90 அடி மற்றும் அணையின் கொள்ளளவு 197.95 மில்லியன் கன அடியாகும்.

இதன்மூலம் பாசன வசதி பெறும் ஆறு மற்றும் குளங்களின் மொத்த கொள்ளளவு 119.92 மில்லியன் கன அடியாகும். பருவமழை போதிய அளவிற்குப் பெய்து, அணைக்கு முழு கொள்ளளவு தண்ணீர் வரும் காலங்களில், அனைத்துக் குளங்களிலும் முழுமையான அளவிற்கு தண்ணீர் நிரப்பப்படும். பற்றாக்குறைக் காலங்களில் அணையிலுள்ள நீர் இருப்பினைப் பொறுத்து அனைத்துக் குளங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இந்த நடைமுறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது.

இதன்மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் 2,024 ஏக்கரும், கரூர் மாவட்டத்தில் 299 ஏக்கரும், ஆக மொத்தம் 2,323 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டு 19-10-2014, 20-10-2014 மற்றும் 21-10-2014 ஆகிய மூன்று நாட்கள் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாக வெள்ள நீர் வாய்க்காலுக்குள் நுழைந்ததால், வாய்க்கால் கரைகள் பலத்த சேதமடைந்து, வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. இப்பகுதியில், இம்மூன்று நாட்களில் மட்டும் சுமார் 70 மில்லி மீட்டர் முதல் 200 மில்லி மீட்டர் வரை மழைப் பொழிவு ஏற்பட்டது. இதன்காரணமாக, பெருமாள்குளம்

2015 செப்டம்பர் 14] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வரத்து வாய்க்கால், சத்திரப்பட்டி கருங்குளம் வரத்து வாய்க்கால், பழனி வாய்க்கால், பாப்பன்குளம் பாப்பன் வாய்க்கால், பட்டிக்குளம் வாய்க்கால், கரிசல்குளம் செங்குளம் வாய்க்கால், பழனி பாப்பன்குளம் வாய்க்கால், பஞ்சந்தாங்கி வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களில் ஏற்பட்ட சேதங்களைச் சரி செய்யும்பொருட்டு, வெள்ளச் சேத நிதியிலிருந்து ரூ.258 இலட்சம் மதிப்பில் சேதமடைந்த இடங்களில் கால்வாய் உடைப்புகள் சரிசெய்யப்பட்டு, ஆங்காங்கே வெள்ளம் வாய்க்காலுக்குள் நுழையாதவாறு பக்கவாட்டில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. வரத்து வாய்க்கால்களில் வெள்ளத் தடுப்புச் சுவர் ஏற்கெனவே ஏதும் இல்லாததால், பல இடங்களில் மலைச் சரிவுகளிலிருந்து வரும் வெள்ள நீர் வாய்க்கால்களுக்குள் நுழைந்ததால், வாய்க்கால்களின் கரைகள் அடித்துச் செல்லப்பட்டன. இவ்விடங்களில் வாய்க்கால்களில் தண்ணீர் நுழையாமல் தடுக்கும்வண்ணமும், நீர் வீணாகாமல் இருக்கவும், பக்கவாட்டுச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே, தற்போது அனைத்து வரத்து வாய்க்கால்களும் நல்ல நிலையிலேயே உள்ளன.

முற்பகல் 11-55

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதியில், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் பரப்பலாறு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 6 ஏரிகளும், முறைசாரா பாசனத்தின்கீழ் 3 ஏரிகளும் உள்ளன. அதாவது, பரப்பலாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் உள்ள ஏரிகளாக, மூத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், சடையகுளம், செங்குளம், ராமசமுத்திரம்குளம், ஜவ்வாதுபட்டி பெரியகுளம் ஆகியவையும், முறைசாரா ஏரிகளாக காவேரியம்மாபட்டி பெரியகுளம், நவகாணிகுளம், கொல்லப்பட்டிகுளம் ஆகியவையும் உள்ளன. மேற்கண்ட ஒன்பது குளங்களிலும், நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் நிதியாண்டில் ரூபாய் 51.79 இலட்சத்திற்கு மண் கரை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புனரமைக்கப்பட்டுவிட்டன.

பரப்பலாறு அணையைப் பொறுத்தவரையில், இவ்வணையில் படிந்துள்ள வண்டல் மண் படிவுகளைத் தூர் வார, அரசாணை (நிலை) எண் 108, பொதுப் பணித் (W1) துறை, நாள் 15-5-2015 மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், ரூபாய் 19.50 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வணைப் பகுதி மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்தால் சுற்றுச்சூழல்ரீதியாக பாதுகாக்கப்பட்ட பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. அணையைத் தூர் வார, தேவையான சுரங்கத் திட்ட அறிக்கை (Mining Plan) தயாரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தூர் வாருவதற்கு வாகனங்கள் அணைக்குள் செல்லும் வழித்தடங்கள் காப்புக் காடுகள் வழியே செல்வதால், வனத் துறையின் அனுமதி பெறும்பொருட்டு, மத்திய சுற்றுச்சூழல் வனப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்திடம் ஏப்ரல் 2015-ல் அனுமதி கோரப்பட்டு, அதுவும் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்திடம் உரிய அனுமதி பெறப்பட்டவுடன், பரப்பலாறு அணையில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரத்து வாய்க்கால்களில் கான்கிரீட் தளங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார். தற்போது வருகின்ற நீரின் அளவைத் தாங்கக்கூடிய அளவிற்கு, தேவையான இடங்களில் பக்கவாட்டுச் சுவர்கள் மிக உறுதியாக அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போது அந்த நிலை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் தேவைப்படின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலத்தின் காலநிலைகள் மாறினாலும், கழகத்